Registered as a News Paper | பக்கங்கள் 04 | விலை ரூபா: 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம் 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | ஆடி 15 | 30 - 07 - 1992 | வியாழக்கிழமை | ஓசை 1( 3

## பௌத்தகாங்கிரசில்பிளவு
## புதிய தலைவர் நியமனம்

(கொழும்பு)

அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் அமைப்பிற்குள் பிளவு ஏற்பட்டிருக்கிறது என்று கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன. இதன் விளைவாக இவ் அமைப்பின் தலைவர் பேராசிரியர் எம். பி ஆரியபாலா பதவி யிழந்துள்ளார். புதிய தலைவராக டாக்டர் கே. ரி. டபிள்யு சுமணசூரிய தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். மேற்படி கட்சியின் வருடாந்த மாநாட்டிலேயே இவர் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

## ( மட்டக்களப்பில் புலிகளின் துணிகரத் தாக்குதல் )

# சிங்கள ராணுவ ரோந்து அணி சிதறடிப்பு

# 30 ராணுவத்தினர் பலி: பலர் படுகாயம்

## உதவிக்கு வந்த படை விரட்டியடிப்பு
## 'செயின்' கவச வாகனம் அழிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகள் மேற்கொண்ட துணிகரத் தாக்குதல் ஒன்றில் சிங்கள இராணுவ ரோந்து அணியொன்று சிதறடிக்கப்பட்டது. புலிகள் மேற்கொண்ட வெற்றிகரமான இத் தாக்குதலின் போது முப்பதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப் பட்டனர். பலர் படுகாயமடைந்தனர் ஏனையோர் முகாம் நோக்கி ஓடினர். இதேவேளை அண்மையிலிருந்த முகாமிலிருந்து உதவிக்கு விரைந்த இராணுவத்தினரின் "செயின்'' கவச வாகனமொன்று புலிகளின் ஆர். பி. ஜி. தாக்குதலினால் சேதமடைந்தது. இதைத் தொடர்ந்து உதவிப்படையும் பின்வாங்கிச் சென்றது.

இம் மோதலில் ஒரு போராளி வீரச்சாவடைந்தார்.

நேற்றுக் காலை 8-30 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆலங்குளச் சந்தி என்னும் இடத்தில் இத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது நாவலடி இராணுவ முகாமிலிருந்து சுமார் ஒரு மைல் தொலைவில் இவ் ஆலங்குளச் சந்தி உள்ளது. நாவலடி இராணுவ முகாமிலிருந்து 6 ஆம் கட்டை இராணுவ முகாமிற்குரோந்து சென்ற சுமார் 60 பேர் கொண்ட இராணுவ அணியே புலிகளின் அதிரடித் தாக்குதலுக்கு உள்ளாகியது.

புலிகள் மேற்கொண்ட இத் துணிகர அதிரடித் தாக்குதல் சுமார் 12 நிமிடங்கள் வரையுமே இடம் பெற்றது. புலிகளின் தாக்குதல் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாத இராணுவத்தினர் தமது சகாக்களின் சடலங்களையும் விட்டு நாவலடி முகாம் நோக்கி ஓட்டம் எடுத்தனர்.

இதேவேளை மோதல் இடம் பெற்றுக்கொண்டிருந்த பகுதியை நோக்கி நாவலடி இராணுவ முகாமிலிருந்து ஒரு 'செயின்' கவச வாகனமும், இரு 'பவள்' வாகனங்கள்சகிதம்

[4 ஆம் பக்கம் பார்க்க]

# அள்ளப்பட்ட ஆயுதங்கள்

(நமது நிருபர்)

★ ஏ. கே. எல். எம். ஜி. லிங் — 959

## எல்லைக் கிராமங்களிலிருந்து
## சிங்களவர்கள் ஓட்டம்

### தருத்து நிறுத்த அரசு முயற்சி

(வவுனியா)

மன்னார்-வவுனியா மாவட்டங்களிலிருந்து பெருமளவு சிங்களக் குடியேற்றவாசிகள் இராணுவத்தினரின் வேண்டுகோளையும்மீறி வெளியேறி வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அண்மையில் தந்திரிமலை சிறிலங்கா இராணுவ முகாம் விடுதலைப்புலிகளால் தாக்கி முற்றாக அழிக்கப்பட்டமையும், இராணுவ கட்டுப்பாட்டிற்குள் இருந்த தந்திரிமலை விகாரையின் பிரதம பிக்குவான குடகோங்ஸ்தட விமல ஞானதேரோ கொலை செய்யப்பட்டமையுமே இவ்வெளியேற்றம் இடம் பெறுவதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப் படுகிறது.

மேற்படி பகுதிகளில் பெருமளவு பொலிஸ், இராணுவ பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டே இச்சிங்களக் குடியேற்ற வாசிகள் குடியேற்றப் பட்டிருந்தனர். இப்பகுதிகளில் இரண்டு இராணுவ முகாம்களும், பல காவல் நிலையங்களும் அமைக்கப்பட்டிருந்த போதிலும் இவர்கள்மீது இக் குடியேற்றவாசிகள் நம்பிக்கை இழந்து விட்டதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை வண்ணாங்தள இராணுவ முகாமை விடுதலைப்புலிகள் தாக்கி அழித்து

[4 ஆம் பக்கம் பார்க்க]

## இயக்கச்சியில் கண்ணி;
## 4 படை பலி; 4 பேர் காயம்

### கவசவாகனம் வெடித்து சிதறியது

(கொழும்பு)

இயக்கச்சியில் இராணுவ வீரர் சென்ற வாகனம் ஒன்று புலிகளின் கண்ணி வெடியில் சிக்கியது வாகனத்தில் பயணித்தவர்கள் நான்கு பேர் உயிரிழந்தனர் நான்கு பேர் படுகாயமடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டிவெரித்தாஸ்

## கொழும்பிற்கு அனுப்பப்பட்டனர்

(சென்னை)

கடந்த சனிக்கிழமை கல்கத்தாவிலிருந்து சென்னையிலுள்ள மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வந்திறங்கிய இலங்கைத் தமிழ் தீவிரவாதிகள் எனச் சந்தேகிக்கப்படும் நான்கு இலங்கைத்தமிழர்கள் அன்றிரவு கொழும்பிற்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர் என்று தமிழக பொலிசார் தெரிவித்து

சிங்கள இராணுவ ரோந்து அணியொன்று [illegible]
வெற்றிகரமான இத் தாக்குதலின் போது முப்பதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர் ஏனையோர் முகாம் நோக்கி ஓடினர். இதேவேளை அண்மையிலிருந்த முகாமிலிருந்து உதவிக்கு விரைந்த இராணுவத்தினரின் "செயின்" கவச வாகனமொன்று புலிகளின் ஆர். பி. ஜி. தாக்குதலினால் சேதமடைந்தது. இதைத் தொடர்ந்து உதவிப்படையும் பின்வாங்கிச் சென்றது.

இம் மோதலில் ஒரு போராளி வீரச்சாவடைந்தார்.

நேற்றுக் காலை 8-30 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆலங்குளச் சந்தி என்னும் இடத்தில் இத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது நாவலடி இராணுவ முகாமிலிருந்து சுமார் ஒரு மைல் தொலைவில் இவ் ஆலங்குளச் சந்தி உள்ளது. நாவலடி இராணுவ முகாமிலிருந்து 6 ஆம் கட்டை இராணுவ முகாமிற்கு ரோந்து சென்ற சுமார் 60 பேர் கொண்ட இராணுவ அணியே புலிகளின் அதிரடித் தாக்குதலுக்கு உள்ளாகியது.

புலிகள் மேற்கொண்ட இத் துணிகர அதிரடித் தாக்குதல் சுமார் 12 நிமிடங்கள் வரையுமே இடம் பெற்றது. புலிகளின் தாக்குதல் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாத இராணுவத்தினர் தமது சகாக்களின் சடலங்களையும் விட்டு நாவலடி முகாம் நோக்கி ஓட்டம் எடுத்தனர்.

இதேவேளை மோதல் இடம் பெற்றுக்கொண்டிருந்த பகுதியை நோக்கி நாவலடி இராணுவ முகாமிலிருந்து ஒரு 'செயின்' கவசவாகனமும், இரு 'பவள்' வாகனங்களும் சகிதம்

[4 ஆம் பக்கம் பார்க்க]

மன்னார்-வவுனியா மாவட்டங்களிலிருந்து பெருமளவு சிங்களக் குடியேற்றவாசிகள் இராணுவத்தினரின் வேண்டுகோளையும்மீறி வெளியேறி வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அண்மையில் தந்திரிமலை சிறிலங்கா இராணுவ முகாம் விடுதலைப்புலிகளால் தாக்கி முற்றாக அழிக்கப்பட்டமையும், இராணுவ கட்டுப்பாட்டிற்குள் இருந்த தந்திரிமலை [illegible] வான் குட்டகோங்ஸ்தட்ட விமல ஞானதேரோ கொலை செய்யப்பட்டமையுமே இவ்வெளியேற்றம் இடம் பெறுவதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப் படுகிறது.

மேற்படி பகுதிகளில் பெருமளவு பொலிஸ், இராணுவ பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டே இச்சிங்களக் குடியேற்ற வாசிகள் குடியேற்றப் பட்டிருந்தனர். இப்பகுதிகளில் இரண்டு இராணுவ முகாம் [illegible] போதிலும் இவர்கள்மீது இக் குடியேற்றவாசிகள் நம்பிக்கை இழந்து விட்டதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை வண்ணாங்குள இராணுவ முகாமை விடுதலைப்புலிகள் தாக்கி அழித்து

[4 ஆம் பக்கம் பார்க்க]

## இயக்கச்சியில் கண்ணி; 4 படை பலி; 4 பேர் காயம்

### கவசவாகனம் வெடித்து சிதறியது

(கொழும்பு)

இயக்கச்சியில் இராணுவ வீரர் சென்ற வாகனம் ஒன்று புலிகளின் கண்ணி வெடியில் சிக்கியது வாகனத்தில் பயணம் செய்த இராணுவ வீரர்கள் நான்கு பேர் உயிரிழந்தனர் நான்கு பேர் படுகாயமடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டிவெரித்தாஸ் தெரிவித்தது.

## கொழும்பிற்கு அனுப்பப்பட்டனர்

(சென்னை)

கடந்த சனிக்கிழமை கல்கத்தாவிலிருந்து சென்னையிலுள்ள மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வந்திறங்கிய இலங்கைத் தமிழ் தீவிரவாதிகள் எனச் சந்தேகிக்கப்படும் நான்கு இலங்கைத்தமிழர்கள் அன்றிரவு கொழும்பிற்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர் என்று தமிழக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# அள்ளப்பட்ட ஆயுதங்கள்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு ஆலங்குளச்சந்தியில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| ★ ஏ. கே. எல். எம். ஜி. | — | 04 |
| ★ 20[illegible] பிஸ்ரல் | — | 01 |
| ★ 60 எம். எம். மோட்டர் | — | 01 |
| ★ 60 எம். எம். பேஸ்பிளேட் | — | 01 |
| ★ 60 எம். எம். ஸ்ரான்ட் | — | 01 |
| ★ ரி - 56 - 2 ரக துப்பாக்கிகள் | — | 12 |
| ★ ரி - 56 - 1 ரக துப்பாக்கிகள் | — | 12 |
| ★ ரி - 56 - புதிய ரக துப்பாக்கி | — | 01 |
| ★ ரி - 81 - 1 ரக துப்பாக்கி | — | 01 |
| ★ ஜே. ஆர். ரக கைக்குண்டுகள் | — | 03 |
| ★ நடுத்தர ரவைகள் | — | 4194 |
| ★ 60 எம். எம். ஷெல் | — | 01 |
| ★ 40 எம். எம். ஷெல் | — | 05 |
| ★ ஏ. கே. எல். எம். ஜி. ரம்மகசீன் | — | 12 |
| ★ ரி - 56 ரக மகசீன் | — | 70 |
| ★ ரி - 81 ரக மகசீன் | — | 04 |
| ★ ஏ. கே. கோல்சர் | — | 15 |
| ★ ஏ. கே. எல். எம். ஜி கோல்சர் | — | 01 |
| ★ சப்ளே கோல்சர் | — | 06 |
| ★ கிட்பாக் | — | 04 |
| ★ ஏ கே எல். எம். ஜி. லிங் | — | 959 |
| ★ சப்பாத்து சோடி | — | 13 |

## ஈரற்பெரிய குளத்தில் வாகன சோதனை நிலையம்

(வவுனியா)

வடபகுதிக்கான பொருள்கள் ஏற்றி வரும் வாகனங்கள் மீதான சோதனை நிலையம் திடீர் என்று ஈரற்பெரிய குளம் இராணுவ முகாம் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் மூன்று முறிப்பு பகுதியில் பழைய சர்வோதய கிளை அலுவலகத்திற்கருகே இந்த சோதனை நிலையம் செயற்பட்டு வந்தது.

லொறிகள் மற்றும் டிராக்டர்களில் பொருள்களை ஏற்றிச் செல்லும் சாரதிகள் இந்த நிலையத்தில் வரிசையில் வாகனங்களை நிறுத்தி வைக்க வேண்டும். பின்னர் இராணுவத்தால் சோதனை செய்யப்பட்ட பின்னரே அவை வடபகுதி நோக்கிச் செல்ல அனுமதிக்கப்பட்டு வந்தன.

திடீர் என்று இச் சோதனை நிலையம் இடமாற்றம் செய்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வீரச்சாவு

### 2ம் லெப்·ரவிகுலன்

மட்டக்களப்பு ஆலங்குளம் சந்திக்கு அருகே சிறிலங்கா இராணுவத்தினரை வழிமடக்கி விடுதலைப்புலிகள் நேற்று நடாத்திய தாக்குதலின்போது 2-ம் லெப். ரவிகுலன் அல்லது மதன் என்பவர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார் இவருக்கு விடுதலைப்புலிகள் வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

# சாம்பல்தீவில் புலிகள் சாதனை

# ராணுவ - பொலிஸ் முகாம் அழிப்பு

## 5 படை பலி: காவலரண்கள் தகர்ப்பு

(திருமலை)

திருமலை மாவட்டம் சாம்பல்தீவு என்னுமிடத்தில் புலிகள் மேற்கொண்ட வெற்றிகரமான தாக்குதல் ஒன்றில் பொலிஸ் - இராணுவ கூட்டு முகாம் ஒன்றும், அண்மையிலிருந்த இரண்டு காவலரண்களும் கைப்பற்றி அழிக்கப்பட்டன. இத்தாக்குதலில் ஐந்திற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். பல நவீன ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன புலிகளின் வெற்றிகரமான இத் தாக்குதலில் புலிகள் தரப்பில் சேதம் எதுவுமில்லை.

நேற்று அதிகாலை 12. 20 மணியளவில் இத் தாக்குதல் கொடுக்கப்பட்டது. திருமலை நகரில் இருந்து சுமார் ஐந்து மைல் தொலைவிலுள்ள சாம்பல்தீவில் அமைந்திருந்த இராணுவ -பொலிஸ்கூட்டு முகாமே புலிகளின் தாக்குதலுக்குஇலக்காகியதாகும்.

இக் கூட்டு முகாம் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலானது சுமார் 30 நிமிடங்கள் வரை நீடித்தது. இதைத் தொடர்ந்து முகாம் புலிகளின் பூரண கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதனைத் தொடர்ந்து முகாம் புலிகளால் அழிக்கப்பட்டது.

இக் கூட்டு முகாம் மீது தாக்குதல் நடைபெற்ற அதே சமயம், சாம்பல் தீவு பாலத்தில் அமைந்திருந்த காவலரண் மீதும், ஆத்திமோட்டையில் இருந்த காவலரண் மீதும் புலிகள் தாக்குதலைத் தொடுத்தனர். இத்தாக்குதல் சுமார் 10 நிமிடம் வரை இடம் பெற்றது இதைத்தொடர்ந்து புலிகளின் கட்டுப்பாட்டினுள் வந்த

[4 ஆம் பக்கம் பார்க்க]

# கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

(நமது நிருபர்)

சாம்பல் தீவு பொலிஸ் இராணுவ கூட்டுமுகாம் மற்றும காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதலை மேற்கொண்டு இராணுவத்தினரிடமிருந்து கைப்பற்றிய ஆயுதங்களின் விபரங்கள் வருமாறு:

| | | |
|---|---|---|
| ★ சிங்கப்பூர் 203 பிஸ்ரல் | — | 01 |
| ★ ரி. 56 - 1 ரக துப்பாக்கிகள் | — | 04 |
| ★ எஸ். எல். ஆர் ரக துப்பாக்கி | — | 06 |
| ★ 303 ரக துப்பாக்கி | — | 04 |
| ★ பெரிய ஜே. ஆர் ரக கைக்குண்டு | — | 05 |
| ★ ஜே. ஆர். ரக கைக்குண்டு | — | 13 |
| ★ 40 எம். எம். ஷெல் | — | 05 |
| ★ நடுத்தர ரவைகள் | — | 855 |
| ★ நேற்ரோ ரக ரவைகள் | — | 825 |
| ★ 303 ரக ரவைகள் | — | 966 |
| ★ 5. 56 ரக ரவைகள் | — | 256 |
| ★ நடுத்தர காஸ் ரவைகள் | — | 145 |
| ★ 5. 56 காஸ் ரவைகள் | — | 119 |
| ★ டம்மி ரவைகள் | — | 18 |
| ★ ஏ. கே. மகசீன் | — | 28 |
| ★ எஸ். எல். ஆர் மகசீன் | — | 12 |
| ★ எஸ். 84 மகசீன் | — | 05 |
| ★ 303 மகசீன் | — | 04 |
| ★ பராலைற் | — | 02 |
| ★ தண்ணீர்க்கான் | — | 15 |
| ★ தண்ணீர்க்கான் கோல்சர் | — | 25 |
| ★ ஏ. கே. கோல்சர் | — | 04 |
| ★ எஸ் 84 கோல்சர் | — | 04 |
| ★ எஸ். எல். ஆர் கோல்சர் | — | 03 |
| ★ கிட்பாக் | — | 07 |
| ★ தொப்பி | — | 07 |
| ★ கெல்மட் | — | 29 |
| ★ ரெயின் கோட் | — | 05 |
| ★ சப்ளே கோல்சர் | — | 09 |
| ★ எஸ். 845 ரொட் செற் | — | 02 |
| ★ பொலிஸ் சப்பாத்து | — | 16 |
| ★ பொலிஸ் தொப்பி | — | 26 |
| ★ பொலிஸ் பெலிட் | — | 02 |
| ★ தடி | — | 09 |
| ★ விசில் | — | 02 |
| ★ மில்ரி சூ | — | 02 |
| ★ மில்ரி பெலிற் | — | 02 |

## அலுவலக நேரமாற்றம்

(யாழ்ப்பாணம்)

வதிவிட அவசர அனுமதி வழங்கும் அலுவலகத்தில் எதிர்வரும் முதலாம் திகதி முதல் அலுவலர்களுக்கான அனுமதியும், வடபகுதிக்குள் நுழைவோரின் அனுமதி புதுப்பித்தலும் காலை 10 மணி முதல் 12மணி வரையும் மட்டுமே வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## வரி விளம்பரம்

**விற்பனைக்கு**

கிணற்றுப்பங்குடன் 8 பரப்புத் தோட்டக்காணி அல்வாய் தெற்கில் கிராம சபைக்கு அருகாமையில் உண்டு. தொடர்பு திருமதி ப. சுப்பிரமணியம், அதிபர் அல்வாய் தெற்குஅல்வாய் [4773]

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை.

### இசைக்கலைமணி நாட்டியக்கலைமணி அனுமதித்தேர்வு 1991 / 92

மேற்படி பரீட்சைக்கு தவிர்க்கமுடியாத காரணங்களால் சமுகமளிக்க இயலாத மாணவர்கள் 9-08-1992 சனிக்கிழமையன்று காலை 9 மணிக்கு ஏற்கனவே அறிவித்த அறிவுறுத்தல்களின்படி தகுந்த ஆவணங்களுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

எதுவித காரணங்கள் குறித்தும் பிறிதொரு நாள் நேர்முகப் பரீட்சைவைக்கப் படமாட்டாது என்பதை அறியத்தருகின்றோம்.

பதிவாளர்.

(சி 4789)

## அறிவித்தல்

### கல்விப் பட்டப் பின் டிப்ளோமா ஆண்டுத்தேர்வு 1991

கல்விப் பட்டப் பின் டிப்ளோமா முழுநேரம், பகுதி நேரம்-பகுதி 1. பகுதி நேரம் - பகுதி 11 ஆகிய மாணவர்கள் ஆண்டுப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பங்களைத்தேர்வுகள்கிளையில் பெற்று, பூர்த்தி செய்து, உதவிப் பதிவாளர் / தேர்வுகள் அலுவலகத்தில் 1992-09-04ம்திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ சமர்ப்பிக்குமாறு

## தெரிவுக்குழுவின் அறிக்கை 10ஆம் திகதி சமர்ப்பிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுவதற்கென நியமிக்கப்பட்டபாராளுமன்றத் தெரிவுக் குழு எதிர்வரும் 10ஆம்திகதி தனது அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க உள்ளதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. (க) (பா)

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## வீதித் தடை பற்றிய அறிவித்தல்

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தினை முன்னிட்டு 03-08-1992 ஆம் திகதி அதிகாலை 12.01 மணியிலிருந்து 28-08-1992 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணி வரைக்கும் கீழ் வரும் பாதைகள், தெருக்கள் போக்குவரத்திற்கு மூடப்பட்டிருக்கும் என்பதை அறியத் தருகின்றோம்.

01. அரசடிச் சந்திக்கும் 2 ஆம் கட்டை தூணுக்கும் இடைப்படும் பருத்தித்துறை வீதியின் அப்பாகம்,
02. பிராமணக் கட்டுக்குளம் சந்தியிலிருந்து சங்கிலியன் வீதிச் சந்திக்கு இடைப்படும் கோவில் வீதியின் அப்பாகம்.
03. செட்டித்தெரு ஒழுங்கையிலிருந்து செட்டித்தெருவின் அப்பாகம்.
04. பஸ் வண்டிகள், மினி பஸ்கள் மற்றும் சுமைகூடிய வாகனங்கள் ஆனைப்பந்திச் சந்தியிலிருந்து நாவலர் வீதிவழியாகக் கச்சேரி நல்லூர் வீதிச்சந்தி வழியாக முத்திரைச் சந்தைச் சந்தியூடாகச் செல்லல்.
05. 2 ஆம் கட்டைக் குறுக்கு வீதியிலுள்ளவர்கள் மட்டுமே தமது வாகனங்களை அவ்வீதியில் பாவிப்பதற்கு அனுமதிக்கப்படுகிறது.

எனவே சகல வாகன உரிமையாளர்களும் இவ்விடயத்தில் பூரண ஒத்துழைப்பு நல்குமாறு வேண்டுகின்றோம்.

மாநகர அலுவலகம், யாழ்ப்பாணம் 27-07-1992

மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.

(சி-4786)

## படம்வரைஞர்கள் தேவை

I கட்டட, குடிசார் (சிவில்) படம்வரைஞர்கள்

II எந்திரவியல் படம் வரைஞர்கள்

தேவைப்படுகின்றனர், தகுதியானவர்கள் 02-08-1992 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இலக்கம்: 163
மே/பா ஈழநாதம்,
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(சி 4782)

## மாபெரும் சைக்கிள்,

## 31-ம் நாள் நினைவஞ்சலி



வீரப்பிறப்பு 16 — 03 — 1976

வீரச்சாவு 30 — 06 — 1992

### வீரவேங்கை மறைச்செல்வன்

(அமிர்தன்)

[குமாரவேல் சசிக்குமார்]

மறத்தமிழன் குமாரவேல் மைந்தனாய் பிறந்தவனே
''மறைச்செல்வன்'' எனும் பெயரில் வேங்கையாய் வாழ்ந்தவனே
அறங்காத்த வீரத்தாய் அமுதுண்டதால்
தமிழன் மறங்காத்துப் போராடி மரணித்த மாவீரா!
புறங்காட்டி ஓடவில்லைபோர்க்களமாம்கட்டைக்காட்டில்
பொன்மார்பைநிமிர்த்தி நின்று குண்டைநீ ஏற்றுவிட்டாய்
திறம் காட்டிப் பதினாறு வயதினிலே தமிழ் மண்ணின்
உரமானாய் உத்தமனே!
உனை ஈழம் மறக்காது.

உமது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்.

ரி.சி லேன், மானிப்பாய். (2889)

அப்பா, அம்மா, சகோதரர்கள், உற்றார் உறவினர், நண்பர்கள்

## 1-ம் ஆண்டு நினைவலைகள்



### வீரவேங்கை நிருபா

(சரோஜினி சதாசிவம்)

வீரப்பிறப்பு 06 - 04 - 1971

வீரச்சாவு 30 - 07 - 1991

(ஆ. க. வெ. நடவடிக்கையின் போது புல்லாவெளியிலிருந்து முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில்)

மட்டுநகர் ஈன்றெடுத்த
நிருபா - நீ
தன்னினம் வாழ வேண்டும்
தமிழீழம் பிறக்க வேண்டும் என்று
உறுதி கொண்டாய் . உரமானாய்

## பொதுக் கூட்டம்

கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கம் லங்கா சீமெந்து நிறுவனக் கிளையின் வருடாந்த பொதுக் கூட்டம்.

காலம்:- 2.8.92 அன்று காலை 9.00 மணிக்கு

இடம்:-திருஞானசம்பந்த வித்தியாசாலை சுன்னாகம் வடக்கு, மதவடி சுன்னாகம்

நிகழ்ச்சி நிரல்:-

(1) தலைவர் உரை
(2) செயலாளர் அறிக்கை
(3) பொருளாளர் அறிக்கை
(4) தீர்மானங்கள்
(5) புது வருட உத்தியோகஸ்தர் தெரிவு

சகல அங்கத்தவர்களும் தவறாது சமுகம் அளிக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பு:-

இடம்பெற இருக்கும் உத்தியோகஸ்தர் தெரிவுகளில் தங்கள் தெரிவுகளை 31-07-1992 வெள்ளிக்கிழமை பி.ப. 4.00 மணிக்கு முன்னர் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர் இ. கா. கணபதிப்பிள்ளை.

செயலாளர் பெ. லோகநாதன்.

[2917]

## நினைவு கூருகின்றோம்...

## 1992 - 07 - 30

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னார் - காக்கையன் குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

**லெப். நிருபன்** [பொன்னுத்துரை கலாநிதி -வாரிக்குட்டியூர், வவுனியா]

**முகிலன்** [குழந்தைவேல் கணேசலிங்கம் - வாரிக்குட்டியூர், வவுனியா]

1988 ஆம் ஆண்டு இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின்போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**கப்டன் மகேந்தி** [தம்பையா பாலகிருஸ்ணன் - தென்னன்மரவடி, திருக்கோணமலை]

திருக்கோணமலை - கன்னியாப் பகுதியில் இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**காந்தி** [கந்தையா பரமநாதன் - 6-ம் வட்டாரம், கும்புறுப்பிட்டி, திருக்கோணமலை]

1989 ஆம் ஆண்டு மன்னார் / அடம்பன் நெடுங்கண்டல் பகுதியில் இந்தியப் படையினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -

**கப்டன் சுசிலன்** [சந்தியோகு நாகராசா மோகன் - தட்சணாமருதமடு, மன்னார்]

**லெப். நிசாம்** [அந்தோனி இதயராசா லம்பேட் - வங்காலை, மன்னார்]

மன்னார் / அடம்பன், தாமரைக்குளம் பகுதியில், இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இளம் பெண் உட்பட 42 தமிழர்கள்.

புத்தூரில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட வேம்பிராய் வாசிகளான 3 தமிழர்கள்.

1990 ஆம் ஆண்டு அம்பாறை - தங்கவேலாயுதம் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட பொறிவெடி விபத்தில் எம்மைப் பிரிந்த -

**தினேஸ்** [தம்பிலுவில், அம்பாறை]

திருக்கோணமலை -பன்குளம் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடி விபத்தில் எம்மைப் பிரிந்த -

**நவா** [பா. மகேந்திரன் - அன்புவழிபுரம், திருக்கோண

பதிவாளர்.
(சி/4789)

## அறிவித்தல்

### கல்விப் பட்டப் பின் டிப்ளோமா ஆண்டுத்தேர்வு 1991

கல்விப் பட்டப் பின் டிப்ளோமா முழுநேரம், பகுதி நேரம்-பகுதி 1. பகுதி நேரம் - பகுதி 11 ஆகிய மாணவர்கள் ஆண்டுப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பங்களைத்தேர்வுகள்கிளையில் பெற்று, பூர்த்தி செய்து, உதவிப் பதிவாளர் / தேர்வுகள் அலுவலகத்தில் 1992-09-04ம்திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகிறீர்கள்.

மீள் பரீட்சார்த்திகள்ஒரு பாடத்திற்கு ரூபா 15/- வீதம் செலுத்தி பல்கலைக்கழக காசாளரிடம் சமர்ப்பித்து அதற்கான பற்றுச்சீட்டைவிண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

பூ. ஜெகதீஸ்வரன்.
உதவிப் பதிவாளர் /
தேர்வுகளும் அனுமதியும்.
தேர்வுக்கிளை,
யாழ். பல்கலைக்கழகம்,
1992-07-21 (சி/7944)

## படம்வரைஞர்கள் தேவை

I கட்டட, குடிசார் (சிவில்) படம்வரைஞர்கள்
II எந்திரவியல் படம் வரைஞர்கள்

தேவைப்படுகின்றனர், தகுதியானவர்கள் 02-08-1992 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இலக்கம்: 163
மே/பா ஈழநாதம்,
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/4782)


## மாபெரும் சைக்கிள், மரதன் ஓட்டப் போட்டிகள்

திட்டமிட்டபடி நவாலி வடக்கு சனசமூக நிலையத்தினால் எதிர்வரும் 1 - 8 - 92 அன்று நடைபெறவுள்ளது. இதில் தமிழீழ எல்லைக்குள் உட்பட்ட அனைத்து வீரர்களும் பங்கு பற்றலாம்.

இதில் தூரஎல்லைகள்
சைக்கிள் - 50 மைல், மரதன் - 10 மைல்
இதின் கட்டணமாக
சைக்கிள் - 100 ரூபா, மரதன் - 50 ரூபா

மரதன் ஓட்டவீரர்கள் 1 - 8 - 92 அன்று காலை 5.30 மணிக்கு முன்னதாக நிலையத்திற்கு சமுகம் தரும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தலைவர்
(2910)



## வீரவேங்கை நிருபா

(சரோஜினி சதாசிவம்)

வீரப்பிறப்பு 06 - 04 - 1971
வீரச்சாவு 30 - 07 - 1991

(ஆ. க. வெ. நடவடிக்கையின் போது புல்லாவெளியிலிருந்து முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில்)

மட்டுநகர் ஈன்றெடுத்த
நிருபா - நீ
தன்னினம் வாழ வேண்டும்
தமிழீழம் பிறக்க வேண்டும் என்று
உறுதி கொண்டாய் . உரமானாய்
உன்பணி தொடரும்!

தாய், தந்தை, சகோதரர்கள்,
நண்பர்கள்.

பெரியகல்லாறு,
மட்டக்களப்பு.
(சி/ 4792)

உள்ளங்களில் உணர்வுகளில்
இரண்டாம் ஆண்டு

## நினைவலைகள்



## வீரவேங்கை கானகன்

(கதிரவேலு சதீஸ்குமார்)

மீசாலை மண்ணில்
மழலையாக
1974 - 04 - 27

வன்னி மண்ணில்
மாவீரனாக
1990 - 07 - 30

உப்பளத்து வெளியினிலே அன்று
உன் நண்பர் நலன் காத்தாய் தம்பி
உவப்பாகப் போரிட்டார் உனை நம்பி
உன் சேவை பொறுக்காது அங்கு - உன்
கன்னத்தில் குறிவைத்தான் எதிரி
ஆண்டிரண்டு ஆனதடா தம்பி - இன்றும்
உனைத் தேடுகின்றோம் நம்பி
மக்களிற்காய் உயிர் நீத்தாய் தம்பி
மாவீரனாகி விட்டாய் நம்பி
அணையாத தீபமடா தம்பி - எமை
அணைத்திடவே வந்திடுவாய் நம்பி
கட்டியுனைக் காத்திடுவோம் என்றும்

பெற்றோர், உடன்பிறந்தோர்,
உறவினர், நண்பர்கள்

175, நீவில்
உருத்திரபுரம். (2918)

திருக்கோணமலை - கன்னியாப் பகுதியில் இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -
**காந்தி** [கந்தையா பரமநாதன் - 6-ம் வட்டாரம், கும்புறுப்பிட்டி, திருக்கோணமலை]

1989 ஆம் ஆண்டு மன்னார் / அடம்பன் நெடுங்கண்டல் பகுதியில் இந்தியப் படையினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -
**கப்டன் சுசிலன்** [சந்தியோகு நாகராசா மோகன் - தட்சணாமருதமடு, மன்னார்]
**லெப். நிசாம்** [அந்தோனி இதயராசா லம்பேட் - வங்காலை, மன்னார்]

மன்னார் / அடம்பன், தாமரைக்குளம் பகுதியில், இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இளம் பெண் உட்பட 42 தமிழர்கள்.

புத்தூரில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட வேம்பிராய் வாசிகளான 3 தமிழர்கள்.

1990 ஆம் ஆண்டு அம்பாறை - தங்கவேலாயுதம் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட பொறிவெடி விபத்தில் எம்மைப் பிரிந்த -
**தினேஸ்** [தம்பிலுவில், அம்பாறை]

திருக்கோணமலை -பன்குளம் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடி விபத்தில் எம்மைப் பிரிந்த -
**நவா** [பா. மகேந்திரன் - அன்புவழிபுரம், திருக்கோணமலை]

ஆனையிறவு குறிஞ்சாத் தீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய-
**கானகன்** [கதிரவேலு சதீஸ்குமார் - நீவில், உருத்திரபுரம், கிளிநொச்சி]

1991 ஆம் ஆண்டு ஆனையிறவில் மேற்கொள்ளப்பட்ட ஆ. க. வெ. நடவடிக்கையின்போது புல்லாவெளியிலிருந்து அப்பகுதியை நோக்கி முன்னேறிய சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -
**லெப். மயூரன் / அல்பிறட்** [சின்னத்துரை யோசப் கெனடி - கரம்பொன் கிழக்கு, ஊர்காவற்றுறை, யாழ்.]
**லெப். தாசன்** [தேவலிங்கம் அன்ரனிதாசன் - மயிலிட்டி, யாழ்.]
**2-ம் லெப். நரேஷ்** [சபாரட்ணம் சிவபாதம் - நெல்லியடி மேற்கு, கரவெட்டி, யாழ்.]
**நியாஸ்** [செல்வரத்தினம் சங்கர் -கைதடி, நுணாவில், சாவகச்சேரி, யாழ்.]
**ஜெயராமன்** (சந்திரசேகரம் உதயகுமார் - கைதடி கிழக்கு, சாவகச்சேரி, யாழ்.)
**முரளி** (சின்னத்தம்பி மோகன் - பன்குடாவெளி, தளவாய், மட்டக்களப்பு)
**வசிதரன்** (குருகுலசிங்கம் சௌந்தரராஜன் - 9-ம் வட்டாரம், சிவன்கோயில்வீதி, கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு)
**கம்பன் / சக்தி** (நா. கனகராஜா சத்தியகுமார் - காஞ்சிபுரம் வீதி, மாதகல், யாழ்.)
**நிருபா** (சரோஜினி சதாசிவம் - பெரியகல்லாறு, மட்டக்களப்பு)
**லெப். கர்ணன்** (தம்பிராசா பவனேஸ்வரன் - புளியம்பொக்கணை, கிளிநொச்சி)
**சோழன்** (மாணிக்கராசா சிறிசங்கர் - ஈச்சந்தீவு, ஆலங்கேணி, கிண்ணியா, திருக்கோணமலை)

இதே நடவடிக்கையின்போது ஆனையிறவில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானக் குண்டு வீச்சில் வீரச்சாவெய்திய -
நாட்டுப் பற்றாளரான -
**தேவன்** (சிவஞானம் சிறியானந்தம் . கல்வளை, சண்டிலிப்பாய், சங்கானை, யாழ்.)

யாழ் / வீமன்காமம் பகுதியில் தேசவிரோதிகளினால் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்ட -
**ரஜீவன்** (குமாரசாமி ஜெயக்குமார் - புங்குடுதீவு-07, யாழ்.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி/4793]

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

1-ம் 2-ம் 3-ம் 4-ம் கல்வியாண்டுப் பரீட்சைகள்-1991

## கலை/வர்த்தகம்/முகாமைத்துவம்

மேற்படி பரீட்சைகள் யாவும் கீழ்வரும் திகதிகளில் நடைபெறவுள்ளன. மாணவர்கள் கவனத்திற்கு கொள்ளவும்.

| பரீட்சை | தொடங்கும் திகதி | முடிவடையும் திகதி |
|---|---|---|
| 1ஆம் ஆண்டு கலை / வர்த்தகம் முகாமைத்துவம் | 17 - 08 - 92 | 26 - 08 - 92 |
| 2ஆம் ஆண்டு பொது / சிறப்பு பகுதி 1 கலை / வர்த்தகம் / முகாமைத்துவம் / முதுமெய்யியல்மாணி - தகுதிகாண் தேர்வு | 06 - 10 - 92 | 15 - 10 - 92 |
| 3 ஆம் ஆண்டு பொது / சிறப்பு - பகுதி 2 கலை / வர்த்தகம் / முகாமைத்துவம் / முதுமெய்யியல்மாணி - தகுதிகாண் தேர்வு | 21 - 09 - 92 | 02 - 10 - 92 |
| 4 ஆம் ஆண்டு சிறப்பு - பகுதி 3 கலை / வர்த்தகம் / முகாமைத்துவம் / முதுமெய்யியல்மாணி - தகுதிகாண் தேர்வு | 16 - 10 - 92 | 20 - 10 - 92 |

- பதிவாளர்

(சி/4795)

சிந்தனைக்கு

வேலிகள் நன்றாக இருந்தால்தான்,
அண்டை வீட்டுக்காரன் நன்றாக இருப்பான்.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 30- 07- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## பிரேமா அரசிற்கு ஒரு கடிவாளம்

தென்னிலங்கையில் இருந்து தப்பி ஓடிய 400 ஜே. வி. பி. உறுப்பினர்கள் இந்தியாவில் புகலிடம் பெற்றுள்ளனர். அவர்கள் தமிழ் நாட்டிலுள்ள இரு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது. மேலும் ஜே. வி. பி. அமைப்பின் தற்போதைய தலைவர் சோமவன்ச அமரசிங்காவும் இந்தியாவிலேயே உள்ளதாகவும் அவருக்கு இந்திய மக்கள் தொடர்புச் சாதனங்கள் சில முதன்மை அளிப்பதாகவும் தெரிகிறது.

ஜே. வி. பி. யினர் இந்தியாவில் புகலிடம் பெற்றுள்ள இந்நிலையானது சிறிலங்கா அரசாங்கத்தைப் பொறுத்து பெரிதும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. ஜே. வி. பி. யினரை இரும்புக்கரம் கொண்டு நசுக்கிய சிறிலங்கா அரசு இந்நிலை குறித்து கொண்டுள்ள கவலையானது அதனைப் பொறுத்து நியாயமானதே. ஏனெனில் ஜே வி. பி. யினரை அடக்குவதற்கு அரசாங்கம் மேற்கொண்ட கொடூரமான நடவடிக்கைகள் எஞ்சியுள்ள ஜே. வி. பி. யினரை எந்த வகைச் செயலுக்கும் இட்டுச் செல்லக் கூடியதாகும். மேலும் இந்தியாவின் உதவி கிடைக்குமானால், சிறிலங்கா அரசாங்கம் பெரும் நெருக்கடி ஒன்றை எதிர்நோக்க வேண்டிய நிலை வரும் என்பதில் சந்தேகம் எதுவும் ஏற்படத் தேவையில்லை.

இந்திய இராணுவம் இலங்கையைவிட்டு வெளியேறியதில் இருந்து இலங்கை விவகாரத்தில் இந்தியா பெருமளவில் ஈடுபாடு கொண்டதாகக் காட்டிக் கொள்ளவில்லை. இதற்கு இலங்கை விவகாரத்தில் ஏற்பட்ட இராஜதந்திரத் தோல்வியும் வடக்கு - கிழக்கில் ஏற்பட்ட இராணுவத் தோல்வியுமே காரணமாக இருந்தன. அதேவேளை இந்தியாவின் நட்புச் சக்திகள் தோற்கடிக்கப்பட்டமையால் புதிய முயற்சிகளை எடுப்பதற்குத் தடையாகவும் இருந்தது. ஆனால் முற்றுமுழுதாக இந்தியா இலங்கை விவகாரத்தில் ஒதுங்கியிருந்ததுஎனவும் கூறிவிடமுடியாது. புதிய நட்பு சக்திகளைத் தேடுவதிலும், சாதகமான காலம் ஒன்று உருவாகும்வரையும் காத்திருக்கின்றது என்றே கூறலாம்.

இந்நிலையில் தற்பொழுது தமிழ்நாட்டு முகாங்களிலுள்ள ஜே. வி. பி. உறுப்பினர்களை இந்திய

# இரண்டாவது ஈழப்போரும் சிங்கள தேசமும்

"இராணுவம் அண்மையில் படையில் ஆட்சேர்க்க முயன்ற போது மிக மிகச் சிறு தொகையானோரே விண்ணப்பித்திருந்தனர். சில காலத்திற்கு முன்னிருந்த நிலைக்கு இது முற்றிலும் நேர் மாறானது. மக்கள் நம்பிக்கை இழக்கத் தொடங்கிவிட்டார்கள். இது தேசத்தின் ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதற்காக நடாத்தப்படும் ஒரு போர் அல்ல என இப்போது அவர்கள் உணரத் தலைப்பட்டுள்ளார்கள்.''

மேற்கண்டவாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் ஒருவர் அண்மையில் சிறிலங்கா பாராளுமன்றில் உரையாற்றும் போது குறிப்பிட்டார். இதற்கும் மேலே ஒரு படி சென்று ''உங்களின் அரசியல் வாழ்வை தக்கவைத்துக் கொள்வதற்காக இந்த யுத்தத்தை தொடர்கின்றீர்களா?'' என அப் பாராளுமன்ற உறுப்பினர் ஆளுங்கட்சி உறுப்பினர்களைப் பார்த்துக் கேள்வி எழுப்பினார்.

90 ஜூனில் இரண்டாவது ஈழப் போரை சிங்கள தேசம் ஆரம்பித்தது. அது ஜே. வி. பியின் இரண்டாவது எழுச்சியானது 60,000 ற்கும் மேற்பட்ட சிங்கள இளைஞர்களைப் படுகொலை செய்ததன் மூலம் மிக மிகக் கொடூரமான முறையில் நசுக்கிவிட்ட இறுமாப்பில் சிங்கள அரசு இருந்த காலம் இதே பாணியில் தமிழீழ விடுதலைப் போராட்டமும் அழிக்கப்படும். அழிக்கப்பட முடியும் என சிங்கள இராணுவமும் அரசும் மக்களை நம்பவைத்த நாட்கள்.

மனிதநேயத்திற்கு அப்பாற்பட்ட முறையில் தரை, கடல், வான் வழித் தாக்குதல்கள் தமிழீழ மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டன. மோசமான பொருளாதார தடைகள் விதிக்கப்பட்டன. மருத்துவ சேவைஉட்பட அனைத்து அத்தியாவசிய சேவைகளும் சீர்குலைக்கப்பட்டன.

இந்த வாழ்க்கை நாட்கள் மாதங்கள் என நகர்ந்தது இந்த நெருக்கடிகளை யெல்லாம் நாம் எதிர் கொண்டோம். வெற்றி கொண்டோம் என்பதும் உண்மை தான். ஆனால் இந்த இரண்டு ஆண்டுகளாக எமது தேசம் மிகப் பெரிய அளவிடற்கரிய விலையை இதற்காகக் கொடுத்துள்ளது. போசாக்கின்மையாலும், நோய்களினாலும் குழந்தைகளும், தாய்மாரும் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். இடம் பெயர்தலினாலும் தொழில் இழப்புகளினாலும் தேசத்தின் வாழ்க்கை முறையே மாறிப்போய் விட்டது. ஆனாலும் நெருக்கடிகளையும் சவால்களையும் நாம் வெற்றிகரமாகச் சமாளித்தோம்.

போர் திணிக்கப்பட்ட ஆரம்ப நாட்களில் கட்சி வேறுபாடுகட்கு அப்பாற்பட்டு எல்லா சிங்கள அரசியல் வாதிகளும் தமிழ் தேசம் தோற்கடிக்கப்படுவதைக் காண ஆவலுடன் காத்திருந்தார்கள்.

இரண்டு ஆண்டுகளில் மட்டும் 3000க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டுள்

**பிறேம்**

ளனர். எனவும், 8000 பேருக்கும் மேலானோர் காயப்பட்டுள்ளனர் எனவும் கொழும்பிலுள்ளோர் கணிப்பிடுகின்றனர். இது அவர்கள் எதிர்பார்க்காத ஒருநிலை. ஆனால் உண்மை நிலையோ இதை விட அதிகம். ஜே. வி. பி அழிக்கப்பட்டது போன்றதொரு நிலையையே அவர்கள் கற்பனை செய்து கொண்டிருந்தார்கள்.

இதன் தாக்கம் சிங்கள தேசத்தில் ஒவ்வொருவரிலும் எதிரொலிக்கின்றது. இதன்வெளிப்பாடே படையை விட்டு இராணுவம் (4000ற்கும் மேற்பட்டோர்) தப்பியோடியமையும், புதிதாக சேர்வதற்குப் பின் நிற்பதும் ஆகும்.

இது சிங்கள தேசம் எதிர் கொள்ளும் நெருக்கடியின் ஒரு முகம் மட்டுமே யாவும்.

மறுபுறம் பாரிய யுத்தச் செலவினம் அரசால் சமாளிக்க முடியாத நிலையை அடைந்து விட்டது. சிறிலங்காவின் கடன் பழு 360,000 பில்லியன் ரூபாய்களைத் தாண்டி விட்டது. அதைவிட 860 கோடி ரூபா அவசரக் கடன் உதவியை உலக வங்கியிடம் சிங்கள அரசு நாடி நிற்கின்றது.

அப்படியாயின் போருக்கான செலவினங்களால் அரசு ''யானையைக் கட்டித் தீனி போடுபவனின்'' நிலையிலேயே உள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அநுரா பண்டார நாயக்கா கூட போரில் பெருமளவு பணம் விரயமாவதால் போர் தொடராது நிறுத்தப்பட வேண்டும் என கருத்துத் தெரிவித்துள்ளார்.

சுருங்கக் கூறினால் ஈடு கொடுக்க முடியாத பாரிய யுத்தச் செலவீனங்களும், சிங்கள தேசத்தின் எதிர்பார்ப்பிற்கு மாறாக போரில் அவர்கள் சந்தித்து வரும் இழப்புகளும் தான் இன்று சிங்கள அரசியல் வாதிகளால் ''போர் முடிவிற்குக் கொண்டு வரப்பட வேண்டும்'' என முன் வைக்கப்படும் கருத்திற்கான பிரதான காரணங்களாகும்.

அப்படியானால் நிர்ப்பந்தங்களாலும், நெருக்கடிகளாலும் சூழப்பட்டே அவர்கள் இப்படிப் பேசுகின்றார்கள். ஆனாலும் இன்றும் கூட தமிழீழ தேசத்தின் கேந்திர நிலையான மணலாற்றிலும் இன்னும் தென் தமிழீழத்திலும் குடியேற்றங்கள் தொடர்கின்றன.

அடிப்படை வசதிகள் இன்றி தமிழீழ தேச மக்கள் இன்னலடைகின்றனர். ஆனால் தமிழீழ மண்ணில் சிங்களக் குடியேற்றவாசிகளுக்கு அனைத்து வசதிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

சிங்களப் பேரினவாதம் எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டு இந்தத் தீவை ஒரு பௌத்த சிங்களத் தேசமாக்க தமிழரின் பாரம்பரிய பிரதேசத்தை சிதைத்து அழித்துவிட முனைந்து நிற்கின்றது என்பது மட்டுமே எக்காலத்திற்கும் பொருந்தும் உண்மையாகும்.

மறு வளமாக - எந்த நெருக்கடியையும் அழுத்தங்களையும் எதிர்கொள்வோம். தேசத்தின் இருப்பிற்காக அர்ப்பணிப்புடன் போராடுவோம் என்பது மட்டுமே சகல நெருக்கடிகளையும் தாண்டி தமிழரை- தமிழ் தேசத்தின் இருப்பை உறுதி செய்யும்.

## அளவிற்கு அதிகமான நாயக்க தேரர்கள்

(கொழும்பு)

நாட்டில் அளவுக்கு அதிகமான நாயக்க தேரர்கள் இருப்பதால்மூன்றுநிக்காயக்களையும் பிரதி நிதித்துவப்படுத்த ஒரு பிரதம சங்க நாயக்கத் தேரரைத் தேர்ந்தெடுப்பது நல்லது அமரபுரபௌத்த பிரிவில் மட்டும் 21 நாயக்கத் தேரர்கள் உள்ளனர் என்றும் அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் தலைவர் பேராசிரியர் டீ. ஆரியபால தெரிவித்துள்ளார்.

கொழும்பில்மேற்படி காங்கிரசின் 70ஆவது மாநாட்டில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

நாடெங்கும் பௌத்த மதத்தைச் சாராத வணக்கஸ்தலங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன என்றும்.

கட்சி அரசியல் நாட்டிலுள்ள சகல ஸ்தாபனங்களினதும் செயற்பாட்டில் புற்றுநோய் போல் பரவி வருகிறது இந்த ஸ்தாபனங்கள் சுமூகமாகச் செயலாற்றுவதற்கு இந்தத் தொல்லை எப்போது நீங்கும் என்றும் அவர் கூறினார்.

## பல்கலைக்கழக அனுமதி புதிய முறையைக் கைவிடுக

### – வாசுதேவ கோரிக்கை

(கொழும்பு)

பல்கலைக்கழக அனுமதியில் வடபகுதி மாணவர்களுக்கு தனியான வெட்டுப்புள்ளி நிர்

வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்தது.

வடபகுதி மாணவர்கள் ஒரு

## ஜெயலலிதா அரசு மீது வாழப்பாடி குற்றச்சாட்டு

(சென்னை)

புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட பிறகு எடுக்கப்படவேண்டிய தொடர் நடவடிக்கைகளில் தமிழக அரசு கவனக்குறைவாக இருக்கிறது என்று தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித்தலைவர் வாழப்பாடி கே. ராமமூர்த்தி கூறியிருக்கிறார்.

அரசின் இந்த கவனயீனத்தை புலிகளின் ஆதரவாளர்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்று அவர் கூறினார்.

மூத்த இந்திய நிர்வாக சேவை அதிகாரி திருமதி. சந்திரலேக்கா மீது திரவகத்தாக்குதல் நடத்துவதற்குப் பொறுப்பானவர்களைப் பிடிக்க பொலிசார் தவறிவிட்டதாகவும் சென்னையில் குற்றங்கள் அதிகரித்து வருவதாகவும்செய்தியாளர் வாழப்பாடியிடம் குறிப்பிட்டனர்.

சட்ட விரோதிகள், குற்றவாளிகளின் இருப்பிடமாக மாறி வருகிறது என்றும் மாநில அரசு சட்டம் ஒழுங்கு நிர்வாகத்தை முடுக்கி விட்டால் அன்றி இந்தப் போக்கை மாற்ற முடியாது என்றும் கூறினார்.

## குளிர்காலக் கூட்டத்தொடர் 20 ஆம் திகதி வரை நீடிப்பு

[டில்லி]

இந்தியப் பாராளுமன்றத்தின் குளிர்காலக்கூட்டத் தொடர் ஆகஸ்ட் 20ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. அலுவல் ஆலோசனைக் கமிட்டி மேற்கொண்ட இந்த முடிவுக்கு நேற்று முன்தினம் லோக சபை ஒப்புதல் அளித்தது. ராஜ்ய சபாவின்கூட்டத் தொடரும் இருபதாம் திகதி வரை நீடிக்கப்பட்டு உள்ளது தெரிந்ததே.

### இந்திய துணை ஜனாதிபதி

## பொதுக்கருத்து வேட்பாளர்; தேசிய முன்னணி ஆதரவு

(டில்லி)

இந்தியாவின் துணைக் குடி

லான வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கு தேசிய முன்

பெரும் நெருக்கடி ஒன்றை எதிர்நோக்க வேண்டிய நிலை வரும் என்பதில் சந்தேகம் எதுவும் ஏற் படத் தேவையில்லை.

இந்திய இராணுவம் இலங்கையைவிட்டு வெளி யேறியதில் இருந்து இலங்கை விவகாரத்தில் இந் திய பெருமளவில் ஈடுபாடு கொண்டதாகக் காட்டிக் கொள்ளவில்லை. இதற்கு இலங்கை விவ காரத்தில் ஏற்பட்ட இராஜதந்திரத் தோல்வியும் வடக்கு - கிழக்கில் ஏற்பட்ட இராணுவத் தோல் வியுமே காரணமாக இருந்தன. அதேவேளை இந் தியாவின் நட்புச் சக்திகள் தோற்கடிக்கப்பட்ட மையால் புதிய முயற்சிகளை எடுப்பதற்குத் தடை யாகவும் இருந்தது. ஆனால் முற்றுமுழுதாக இந் தியா இலங்கை விவகாரத்தில் ஒதுங்கியிருந்ததுஎன வும் கூறிவிடமுடியாது. புதிய நட்பு சக்திகளைத் தேடுவதிலும், சாதகமான காலம் ஒன்று உருவா கும்வரையும் காத்திருக்கின்றது என்றே கூறலாம்.

இந்நிலையில் தற்பொழுது தமிழ்நாட்டு முகாங் களிலுள்ள ஜே. வி. பி. உறுப்பினர்களை இந்தியா தனது அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத் தினால் ஆச்சரியப்படுவதற்குஏதுவுமில்லை. ஏனெ னில் இந்தியா கடந்த காலத்தில் அண்டைநாடு களில் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள் ளது. தனது நலனுக்காக அரச எதிர்ப்பாளருக்கு ஆயுதமும், பணமும் உதவியுள்ளது. அத்தோடு இன்று இலங்கையில் இந்திய நட்பு மிகவும் பல வீனமான நிலையிலேயே இருக்கின்றது. விடுத லைப் புலிகளையோ அன்றி சிறிலங்கா ஜனாதிப தியையோ இந்தியா தனது நட்புச் சக்திகளாகப் பாவிக்கவுமில்லை / எண்ணவுமில்லை.

மேலும் இந்திய அரசு சிறிலங்கா அரசினால் ஏமாற்றத்திற்கும், அவமானத்திற்கும் பலதடவை உள்ளாகி உள்ளது. 1987 சிறிலங்கா - இந்தியா சமாதான உடன்படிக்கை தோல்வியில் முடிந் தமை மிகப் பெரியதொரு இராஜதந்திரத் தோல்வி ஆகும். அத்தோடு, அண்மையில் விடுதலைப் புலி களை இந்தியா தடை செய்த போது, சிறிலங்கா தடை செய்யாமை - இந்தியாமறைமுகமாக வற்புறுத் தியும் - பெருத்ததொரு அவமானமும் ஆகும்.

ஆகையினால் இலங்கை விவகாரத்தில் தனது பிடியை இறுக்கிக் கொள்ள ஜே.வி.பி.யினரை இந் தியா பயன்படுத்தலாம். இதற்கு தற்பொழுது இந் தியா ஆதரவு சக்திகள் இலங்கையில் வலுவிழந் துள்ளமையும் காரணமாகலாம். வடக்கு - கிழக் கைப் பொறுத்து இந்தியா ஆதரவு சக்திகள் மக்க ளினால் புறக்கணிக்கப்பட்டவர்களாக கொழும் பில் அடைக்கலம் தேடுபவர்களாகவே உள்ளனர். அத்தோடு இந்தியாவின் கடந்தகால அனுபவம் அவர்கள் மூலம் பெருநன்மை ஏற்பட முடியாது என்பதையும் உணர்த்தியுள்ளது. இதேவேளை சிறிலங்காவிலும் இந்தியா ஆதரவு சக்திகள் தமக் குள் முரண்பாடு கொண்டவர்களாக தலைமைத் துவப் போட்டியில் இறங்கி குத்து, வெட்டுப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் 400 ஜே.வி.பி.யினர் கிடைத் தமை இந்தியாவிற்குப் பெரியதொரு பலமாகும். இதனைக் கொண்டு திரு. பிரேமதாசா அரசாங்கத் திற்கு ஒரு கடிவாளம் போட இந்தியா முயற்சித் தால் வியப்பொன்றும் இல்லை.

---

ப்பதால்மூன்று நிக்காயக்களையும் பிரதி நிதித்துவப்படுத்த ஒரு பிரதம சங்க நாயக்கத் தேரரைத் தேர்ந்தெடுப்பது நல்லது அமரபுரபௌத்த பிரி வில் மட்டும் 21 நாயக்கத் தேரர்கள் உள்ளனர் என்றும் அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் தலைவர் பேராசிரி யர் டீ. ஆரியபால தெரிவித் துள்ளார்.

கொழும்பில்மேற்படி காங்கி ரசின் 70ஆவது மாநாட்டில் ...லங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன என்றும்.

கட்சி அரசியல் நாட்டிலு ள்ள சகல ஸ்தாபனங்களின தும் செயற்பாட்டில் புற்று நோய் போல் பரவி வருகிறது இந்த ஸ்தாபனங்கள் சுமூக மாகச் செயலாற்றுவதற்கு இந்தத் தொல்லை எப்போது நீங்கும் என்றும் அவர் கூறி னார்.

## பல்கலைக்கழக அனுமதி புதிய முறையைக் கைவிடுக

### – வாசுதேவ கோரிக்கை

(கொழும்பு)

பல்கலைக்கழக அனுமதியில் வடபகுதி மாணவர்களுக்கு தனியான வெட்டுப்புள்ளி நிர் ணயிக்கப்பட்டுள்ள விவகாரத் தில் உடனடியாக தலையிடு மாறு நவசமசமாஜக்கட்சி சிறி லங்கா ஜனாதிபதி ஆர்.பிரேம தாசாவைக் கேட்டுள்ளது.

1991 ஏப்ரலில் வடபகுதியில் நடைபெற்ற பரீட்சை தனி யான ஒரு பரீட்சையாகக் கணிக்கப்படாமல் 1990 ஓகஸ் டில் நடைபெற்ற பரீட்சையா கவே கணிக்கப்பட வேண்டும் என்றும் தனியான வெட்டுப் புள்ளி யோசனைகைவிடப்பட வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்தது.

வடபகுதி மாணவர்கள் ஒரு யுத்தசூழ்நிலையில் வழமைக்கு மாறான சூழ்நிலையிலேயே தமது கல்வி நடவடிக்கைக ளைக் கொண்டு செல்ல வேண் டியவர்களாகஇருந்தனர் இந்த நடவடிக்கையானது இனப் பிரச்சினையை மேலும் சீர் கேடடையச்செய்து தற்போது நடைபெறும் அர்த்தமற்ற யுத் தத்தை மேலும் உச்சநிலைக்கு கொண்டு செல்லும் என்றும் நவசமசமாஜக்கட்சி தெரிவித் துள்ளது.

## ராணுவத்தின் செலவுக்கென ஏமாற்றி பணம் சேகரிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தின ரின் மருந்துச் செலவுக்கென பணம் வசூலிக்க வரும் போலி இராணுவச்சிப்பாய்களுக்கு நிதி உதவி வழங்க வேண்டாம் என்று உயர் இராணுவ அதி காரி ஒருவர் எச்சரித்துள்ளார்.

யுத்த முனையில் காயமுற்று சிகிச்சைக்காக மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்டிருக்கும் இராணுவத்தினருக்கு மருந்து வாங்க இராணுவச்சீருடையில் வந்த சிலர் கண்டியில் பணம் வசூலித்ததைத் தொடர்ந்தே இந்த எச்சரிக்கை விடப்பட் டுள்ளது.

இராணுவத்தினரின் குடும் பத்தினரிடமே ஏமாற்றிப் பணம் வசூலிக்கப் பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. அதுவும் யுத்த நடவடிக்கை நடை பெறும் பகுதியிலிருக்கும் இரா ணுவத்தினரின் குடும்பத்தினரி டமே பெரும்பாலும் ஏமாற் றிப் பணம் வசூலிக்கப்பட்டுள் ளது. பண வசதியற்ற பெற் றோர் சிலர் தமது நகைகளை அடகு வைத்துப் பணம் கொடுத்ததாகவும் சொல்லப் படுகின்றது. விலை உயர்ந்த அத்தியாவசிய மருந்துகள் மருத்துவமனைகளில் இல்லை என்று கூறி நாசூக்காக பணம் சேகரிக்கப்படுவதாகத் தெரி விக்கப்படுகிறது.

இந்த மோசடியில் ஈடுபட் டுள்ளவர்கள் இராணுவத்தை விட்டு ஓடிய சிப்பாய்களாக இருக்கலாம் என்று பொலிஸ் சந்தேகம் தெரிவிக்கின்றது. குற்றவாளிகளைத்தேடி பொலிஸ் வலைவிரித்துள்ளது.

## 120 போலி பல்வைத்தியர் இலங்கை முழுவதும் சிகிச்சை

இலங்கை முழுவதிலும் சுமார் நூற்றி இருபது போலி டாக்டர்கள் பல்சிகிச்சையில் ஈடுபட்டிருப்பதாக பல் வைத் தியர்சங்கம் அரசாங்கத்திடம் புகார் செய்துள்ளது. இதைய டுத்து போலி பற்சிகிச்சை நிபு ணர்கள் மீது தகுந்த நடவ டிக்கை எடுக்கப்படும் என்று சுகாதார அமைச்சு அறிவித் துள்ளது. இந்தப் போலி பல் வைத்தியர்களால் பொதுமக்க ளுக்கு பெரும் அசௌகரியம் ஏற்பட்டிருப்பதாக பல்வைத் தியர் சங்கம் தெரிவித்த புகா ரில் கூறப்பட்டுள்ளது.

---

புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட பிறகு எடுக்கப் படவேண்டிய தொடர் நடவ டிக்கைகளில் தமிழக அரசு கவனக்குறைவாக இருக்கிறது என்று தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித்தலைவர் வாழப்பாடி கே. ராமமூர்த்தி கூறியிருக்கி றார்.

அரசின் இந்த கவனயீன த்தை புலிகளின் ஆதரவாள ர்கள் பயன்படுத்திக் கொள்கி றார்கள் என்று அவர் கூறி னார்.

மூத்த இந்திய நிர்வாக சேவை அதிகாரி திருமதி. சந் திரலேக்கா மீது திரவகத்தாக் குதல் நடத்துவதற்குப் பொறுப்பானவர்களைப் பிடிக்க பொலிசார் தவறி விட்டதாகவும் சென்னையில் குற்றங்கள் அதிகரித்து வருவ தாகவும்செய்தியாளர் வாழப் பாடியிடம் குறிப்பிட்டனர்.

அதற்குப்பதிலளித்த அவர் சென்னை நகரம் வேகமாக ...வாளிகளின் இருப்பிடமாக மாறி வருகிறது என்றும் மாநில அரசு சட்டம் ஒழு ...விட்டால் அன்றி இந்தப் போக்கை மாற்ற முடியாது என்றும் கூறினார்.

## குளிர்காலக் கூட்டத்தொடர் 20 ஆம் திகதி வரை நீடிப்பு

[டில்லி]

இந்தியப் பாராளுமன்றத் தின் குளிர் காலக்கூட்டத் தொடர் ஆகஸ்ட் 20ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள் ளது. அலுவல் ஆலோசனைக் கமிட்டி மேற்கொண்ட இந்த முடிவுக்கு நேற்று முன்தினம் லோக சபை ஒப்புதல் அளித் தது. ராஜ்ய சபாவின்கூட்டத் தொடரும் இருபதாம் திகதி வரை நீடிக்கப்பட்டு உள்ளது தெரிந்ததே.

### இந்திய துணை ஜனாதிபதி

## பொதுக்கருத்து வேட்பாளர்; தேசிய முன்னணி ஆதரவு

(டில்லி)

இந்தியாவின் துணைக் குடி யரசுத் தலைவர் பதவிக்கு பொதுக்கருத்து அடிப்படையி லான வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கு தேசிய முன் னணி ஆதரவு தெரிவித்துள் ளது.

புதுடில்லியில் நேற்று முன் தினம் நடைபெற்ற தேசிய முன்னணியின் செற்குழுக் கூட் டத்தில் இந்தக் கருத்து எட் டப்பட்டது.

தெலுங்கு தேசக் கட்சியின் தலைவர் என்.டி. ராமராவ் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் இப்பதவிக்கு, செடியூல்ட் அல்லது பழங்குடி இனத்தைச் சேர்ந்த ஒருவர் நிறுத்தப்பட வேண்டும் என வும், இது விடயத்தில் பிர தமர் எல்லா எதிர்க்கட்சி களோடும் பேச்சு நடத்த வேண்டுமெனவும் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

## வளைகுடாப் பகுதியில் அமெரிக்கப் படை குவிப்பு

(நியூயோர்க்)

ஐ. நா. விதித்துள்ள உத்த ரவுகளுக்கு பாக்தாத்தை இணங்க வைக்கும் முயற்சியில் ராஜீயத் துறை நடவடிக்கை களும், பேச்சுவார்த்தைகளும் மேலும் அதிக பங்கு வகிக்க வேண்டுமென்று ஐ. நா. தலை மைச் செயலாளர் பூட்டர்ஸ் காலி வலியுறுத்தியுள்ளார்.

அசோசியேட்டர் பிரஸ் செய்தி நிறுவனத்திற்கு அளித் துள்ள பேட்டியில்பூட்டர்ஸ் காலி கூறுகையில்

ஈராக்கின் வேளாண்மை அமைச்சகத்தின் நுழைவது குறித்து உடனடி நெருக்கடி தீர்க்கப்பட்டபோதிலும் அமெ ரிக்காவிற்கு எதிரான ஆர்ப் பாட்டங்கள் அதிகரித்து வரும் இக் கட்டத்தில் ராஜீய முயற் சிகளின் அவசியத்தை அவர் வலியுறுத்தியுள்ளார்.

ராஜீயத்துறை முயற்சிகள் தோல்வி அடைந்து விட்டரல் அமைதியை ஈடுபடுத்துவதில் ஈடுபடவேண்டும் என்றும், ஆனால் எத்தகைய கட்ட த்தை எட்டுமுன்னர் அமைதி யான முறையில் பிரச்சினை களை தீர்த்துக்கொள்வதற் கான அனைத்து வாய்ப்புக் களும் ஆராய்ந்து அறியப்பட வேண்டும் என்றும் அவர் கூறி னார்.

பாரசீக வளைகுடாப் பகுதி யில் பாதுகாப்பை பராமரிப் பது என்ற தனது வாக்குறு தியை வலியுறுத்தும் வகையில் குவைத்தில் அடுத்த திங்கட் கிழமை முதல் 17 நாள் இரா ணுவப் பயிற்சிகளை நடத்தப் போவதாக அமெரிக்கா அறி வித்துள்ளது.

ஈராக்கை சுற்றியுள்ள கடற் பகுதியில் அமெரிக்க கடற் படை வலுப்படுத்தப்படுகிறது என்றும்,

1900 மாலுமிப் படைகள் அடங்கிய கப்பல் ஒன்று உஷார் நிலையில் வைக்கப்பட் பட்டுள்ளது என்றும்,

பெற்றியாட் ரக ஏவுகணை களும் வளைகுடாப் பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதே நேரம் ஐ. நா. பிரதி நிதிகள் பாக்தாத்திலுள்ள வேளாண்மைத் துறைக் கட்டி டத்தை பரிசோதனை செய்து வருகின்றனர்.

## இந்தியப் பிரதமர் ராவுடன் பாபர் மசூதி கமிட்டி பேச்சு

(டில்லி)

பாபர் மசூதி இயக்க ஒருங் கிணைப்புக் கமிட்டியின் பிரதி நிதித்துவக் குழு ஒன்று நேற்று முன்தினம் மாலை புதுடில்லி யில் பிரதமருடன் பேச்சு வார்த்தை நடத்தியது.

தேசிய ஒருங்கிணைப்புக் குழுவினால் கடந்த நவம்பர் மாதத்தில் எட்டப்பட்ட கட்டமைப்புக்கு உட்பட்ட வகையில் அயோத்தியா விவ காரத்துக்கு தீர்வு காணும்படி பிரதமரைக் கேட்டுக் கொண்டது.

செய்யது சகாபுதீன் தலை மையில் சந்தித்த இக் குழு வினர் பாபர் மசூதி அமைந் துள்ள நிலத்தின் உடமை சம்பந்தமாக உயர் நீதி மன் றத்தின் தீர்ப்பை பாபர் மசூதி ஒருங்கிணைப்புக் கமிட்டி ஏற்றுக் கொள்ளும் என்றும் தெரிவித்தனர்.

## லண்டனில்சமாதானப்பேச்சு அடுத்த மாதம் நடைபெறும்

(லண்டன்)

யூகோஸ்லாவியா சம்பந்த மான சர்வதேச மாநாடு அடுத்தமாத பிற்பகுதியில் லண்டனில் நடைபெற உள்ள தாக தெரிய வருகிறது.

போரில் ஈடுபட்டுள்ள தரகு களும் ஐரோப்பிய சமூகமும் ஐக்கிய நாடுகள் சபையில் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளன

மாநாடு பற்றிய சில விபரங் களும் இன்னமும் பூர்த்திசெய் யப்பட இருப்பதனால் இம்மா நாடு பற்றிய திட்டவட்ட மான திகதி இன்னும் எடுக்கப் படவில்லையென பிரித்தா னிய அரசாங்கத்திற்கு நெருங் கிய வட்டாரங்கள் தெரிவித் தன.

ஈழநாதம்

# தடுத்து வைக்கப்பட்ட 12 பேர் நேற்று புலிகளால் விடுதலை

(நமது நிருபர்)

பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டமைக்காக தமிழீழ விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த சுமார் பன்னிரெண்டு பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

நேற்று யாழ். மாவட்டச் செயலகத்தில் மேற்படி கைதிகளின் உறவினர்கள் மற்றும் பத்திரிகையாளர் முன்னிலையில் இவர்கள் உத்தியோகபூர்வமாக விடுதலை செய்யப்பட்டனர்.

மேற்படி குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் வலிகாமம், வடமராட்சி மற்றும் வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்என தெரியவருகிறது.

## மனிதாபிமான முறையில் விடுதலை செய்கிறோம்

- இளம்பரிதி

''பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்ட உங்களிற்கு நாம் இன்று மனிதாபிமான முறையில் மன்னிப்பளித்து விடுதலை செய்கின்றோம். ஆனால் நீங்கள் மீண்டும் இவ்வாறான குற்றச்செயல்களில் ஈடுபடுவீர்களாயின் உங்கள் கண்ணை நீங்களே குத்திக் கொண்டவர்களாவீர்கள்''

இவ்வாறு நேற்று யாழ். தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற கைதிகள் விடுதலை நிகழ்வில் கலந்து கொண்டு பதத்திரிகையாளர் முன்னிலையில் உரை நிகழ்த்துகையில் யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பருதி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நீங்கள் எம்மால் கைது செய்யப்பட்டு இருக்கின்ற பொழுது உங்கள் குடும்பங்கள் பட்ட கஸ்டங்களை உணர்ந்து எம்மால் அவர்களுக்கு உணவு, உடை, போன்ற எம்மலான உதவிகளை செய்துள்ளோம் இனியாவது நீங்கள் திருந்தி எங்கள் போராட்டத்திற்கு ஒத்துழைப்புவழங்கி நல்லவர்களாக செயற்படுவீர்கள் என நாங்கள் நம்புகின்றோம். எனவும் தெரிவித்தார்

## இளைஞர் புளொட்டால் தடுத்துவைப்பு

(வவுனியா)

வவுனியாவில் தமிழ் வாலிபர் ஒருவர் புளொட் குழுவினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அம்மிவைத்தான் என்ற இடத்தைச் சேர்ந்த செல்லையா பாக்கியநாதன் என்ற வாலிபரே தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

பிரஸ்தாப வாலிபர் குடும்ப சகிதம் ஆசிகுளம் பகுதியில் உறவினர் வீடொன்றில் தங்கியிருந்த சமயம் கைது செய்யப்பட்டார்.

இவரது தற்போதைய நிலை பற்றி அறியப்படவில்லை. (தி)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

சித்த மருத்துவப் பிரிவிற்கு 1991 92 ஆம் ஆண்டிற்கான புதிய மாணவர்களை அனுமதித்தல்

யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத்தின் சித்த மருத்துவப் பிரிவிற்கு பி. எஸ். எம். எஸ். பட்டமாணிப் படிப்பிற்கான மாணவர் களைச்சேர்ப்பதற்கு பின் வரும் தகைமைகள் உள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.


## மாவீரர் நினைவு கூரல் விழா

ஆடி மாதத்தில் வீரச்சாவடைந்த தீவகப் பகுதியைச் சேர்ந்த மாவீரர்களைநினைவு கூரும் முகமாக நடத்தப்படும் 'மாவீரர் நினைவுகூரல் விழா' 30-ம்திகதி வியாழக் கிழமை (இன்று)மாலை யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலய அரங்கில் நடைபெறும்.

## மேஜர்முரளி நினைவு நாள் விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

மேஜர் முரளி நினைவுநாள் விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2-00 மணியளவில் யாழ். புனிதபரியோவான் கல்லூரி மைதானத்திலும் மட்டுவில் மகாவித்தியாலய மைதானத்திலும் நடைபெற உள்ளது.

விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு இவ்விழாவை ஒழுங்கு செய்துள்ளது. பரியோவான் கல்லூரியில் நடைபெறும் விழாவில் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் யாழ். கல்விக்கோட்டப் பொறுப்பாளர் திரு. இதயன் தலைமைதாங்குகிறார். யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் திரு. வே. ஆறுமுகம் பிரதமவிருந்தினராகவும், திரு அருணகிரிராஜா, திரு. மகேந்திரன், யாழ். மாவட்டத்தளபதி திரு. செல்வராசா ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ள உள்ளனர்.

## அகதிகள் இலங்கை திரும்ப

## வவுனியா நகருக்கு வெளியில் பரீட்சை

(வவுனியா)

இந்த ஆண்டு க. பொ. த. (சா.த) பரீட்சையும் க. பொ. த. (உ-த) பரீட்சையையும் வவுனியா நகருக்கு வெளியே நடத்துவதற்கு வவுனியா கல்வித் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

கடந்த இரண்டு வருடங்களாக வவுனியா கிராமப்புற மாணவர் நகரப் பகுதி நிலையங்களில் இப்பரீட்சைகளில் தோற்ற நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

நகரில் இராணுவ அச்சம் உள்ளதால் நூற்றுக்கணக்கான மாணவர்கள் இப்பரீட்சைகளில் தோற்ற முடியாத நிலையில் இருந்தனர்.

இந்த ஆண்டு நடைபெறவுள்ள இந்த இரு பரீட்சைகளும் நகருக்கு வெளியேயும் நடத்துவதற்கு கல்வித் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

ஓமந்தை பாடசாலையிலேயே இப்பரீட்சைகளுக்கான நிலையம் அமையும் என்று தெரிவிக்கப்பட்டது. (தி)

## அடுத்த சார்க் மாநாடு பங்களாதேஷில் நடக்கும்

(கொழும்பு)

பங்களாதேஷின் தலைநகரான டாக்காவில் சார்க் அமைப்பின் ஏழாவது உச்சி மாநாடு டிசம்பர் 1' ஆம் திகதி முதல் மூன்று நாட்கள் நடைபெறவுள்ளது.

மாநாட்டிற்கு முன்னதாக அமைசசர்கள் கூட்டம் வெளியுறவுச் செயலாளர்களின் கூட்டம் ஆகியன இடம் பெறும்.

## ஒலிம்பிக் போட்டிகள் 1992

பாஸிலோனாவில் நடைபெறும் 25-வது ஒலிம்பிக் போட்டிகளில் இது வரை வெளியான முடிவுகளின் படி

இவற்றைவிட போலந்து, பிரிட்டன், பிரேசில் என்பன தலா ஒவ்வொரு வெள்ளிப்பதக்கத்தையும், கம்போடியா, ஆகியன தலா ஒவ்வொரு வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டுள்ளன.

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| சுதந்திர குடியரசுகளின் பொதுநல அமைப்பு | 8 | 5 | 2 |
| சீனா | 5 | 7 | 2 |
| ஹங்கேரி | 5 | 2 | 1 |
| அமெரிக்கா | 4 | 4 | 8 |
| தென்கொரியா | 4 | — | 1 |
| ஜேர்மனி | 2 | 1 | 4 |
| ஸ்பெயின் | 2 | — | — |
| ஜப்பான் | 1 | 2 | — |
| பல்கேரியா | 1 | 2 | 2 |
| அவுஸ்திரேலியா | 1 | 1 | — |
| நோர்வே | 1 | 1 | — |
| கியூபா | 1 | 1 | — |
| துருக்கி | 1 | — | — |
| பிரான்ஸ் | — | 2 | 4 |
| சுவீடன் | — | 2 | 2 |
| இத்தாலி | — | 1 | 3 |
| ருமேனியா | — | 1 | 2 |
| நெதர்லாந்து | — | — | 3 |

### ராஜீவ் கொலைக்கு

# முறைப்பாட்டை ஏற்குமாறு ஆதரை நீதிமன்றில் மனு

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டுச் சிறையில் வைக்கப்பட்டிருக்கும் ஆதரை என்ற இளம் பெண் [வயது 18] புதுடில்லியில் உள்ள அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் ஊழியர் கல்யாணராமன் என்பவருக்கு எதிராகத் தான் சமர்பித்த மனுவை ஏற்குமாறு பொலிஸுக்கு உத்தரவு பிறப்பிக்கும்படி சென்னை உயர் நீதி மன்றத்தைக் கேட்டுள்ளார் கல்யாணராமனை இந்த வழக்கில் சேர்த்துக்கொள்ளும் படியும் மனுவில் கேட்டுள்ளார்.

இவரது கோரிக்கைக்கு ராஜீவ்காந்தி கொலை பற்றி புலனாய்வு நடத்திய குழு ஆட்சேபனை தெரிவித்துள்ளது.

ஆதரை, ஜெர்மனியில்இருக்கும் தனது சகோதரரிடம் செல்வதற்கு இந்திய பாஸ்போட் எடுத்துத் தருவதாக சிவராசன் தந்தவாக்குறுதியின் பேரிலேயே தமிழ் நாட்டுக்குச் சிவராசனுடன் வந்ததாகத் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் உயர் தலைவர்களுடன் தனக்குத் தொடர்பிருப்பதாகச் சிவராசன் கூறியதாகவும், சிவராசன் டில்லியில் கல்யாண ராமனுடன் தொடர்பு கொண்டதாகவும் அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ராஜீவ்காந்தி மே 21 ஆம் திகதி சிறிபெரும்புதூருக்கு வரும் செய்தியை

### மொறட்டுவ சர்வோதய

## தலைமைச் செயலகம் முன் மக்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

மொறட்டுவ சர்வோதய தலைமைச்செயலகத்துக்குமுன்னால் மொறட்டுவ வாசிகள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

சர்வோதய நிலையம் சூழலை மாசுபடுத்துவதாகத் தெரிவிக்கப்படுகிறது. சர்வோதயம் சூழலை மாசுபடுத்துவதாகக் கண்டித்தே மொறட்டுவ வாசிகள் சிலர் சர்வோதயம் முன்னால் ஆர்ப்பாட்டம் செய்தனர் சர்வோதய உஸவத்த வீதி வெண்கட்டித் தொழிற்சாலையில் இருந்து வெளியேறும் தூசு சூழலை மாசு படுத்துவதாகவும், சர்வோதய நிலைய வளாகத்தில் அமைந்திருக்கும் உயர்சக்தி வாய்ந்தஜெனரேட்டர்ஒலியை மாசு படுந்துவதாகவும் ஆர்ப்பாட்டக்காரர் தரப்பில் சொல்லப்படுகிறது.

''சர்வோதயம் போதிப்பதைச் செய்வதில்லை'' என்ற சுலோக அட்டைகளை ஆர்ப்பாட்டக்காரர் தாங்கி நின்றனர்.

## அடிமைப்படாத நிலையை அளிப்பது அவசியம்

–பிரேமதாசா

(கொழும்ப)

அரசியல் ரீதியிலோ, பொருளாதார ரீதியிலோ வெளிநாடுகளுக்கு அடிமைப்படாத ஒரு நிலையை மக்களுக்கு அளித்திட வேண்டியது முக்கியமானதாகும் என்று சிறிலங்கா சில அபிவிருத்தித் திட்டங்களை திறந்து வைத்து உரையாற்றுகையில் அவர் மேலும் காட்டு மிருகங்களால் விவசாயப் பயிர்கள் அழிக்கப்படுவது போக்குவரத்துப் பிரச்சினை, கல்வி, சுகாதாரத்துறைகளில்

## மன்னார் விஜயம்

மன்னார் தீவிலுள்ள தமிழ் அகதிகளின் நிலையை நேரில் கண்டறிவதற்காக பிரிட்டன் உயர் ஸ்தானிகர் ஜோன் பீல்ட் அப்பகுதிக்கு விஜயமொன்றை மேற்கொண்டார். அவருடன் யு என். டி. பி. அமைப்பின் பிரதிநிதி, மற்றும் சிறிலங்காவுக்கானசுவீற்சர்லாந்து தூதுவர் ஆகியோரும் கடந்த வியாழனன்று விஜயம் செய்தனர்.

இவர்கள் இந்தியாவிலிருந்து பலவந்தமாகத்திருப்பி அனுப்பப்பட்டு தற்போதுசிறிலங்கா மற்றும் இந்திய அரசுகளினால் கைவிடப்பட்ட நிலையில் இருக்கும் தமிழ் மக்களை சந்தித்து அவர்களதுநிலைமைகளைநேரில் கேட்டறிந்தனர்.

## 3 வைத்திய நிபுணர் நியமனம்

கைதடி ஆயுள்வேதக் கல்லூரிக்கு மூன்று விசேட வைத்திய நிபுணர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

விசகடி, எரிகாயம், முறிவு நெறிவு ஆகிய துறைகளில் விசேட தேர்ச்சி பெற்ற வைத்திய நிபுணர்களை நியமிப்பது தொடர்பாக கொழும்பு தலைமையகத்துடன் யாழ். அரசாங்க அதிபர் நடத்திய பேச்சுக்களையடுத்து மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. நியமிக்கப்பட்ட மூன்று வைத்திய நிபுணர்களும் மிக விரைவில் தமது கடமைகளைப் பொறுப்பேற்க உள்ளனர். (கு பா)

## முத்தமிழ்

பல்கலைக்கழகம்,
இலங்கை

## சித்த மருத்துவப் பிரிவிற்கு 1991 92 ஆம் ஆண்டிற்கான புதிய மாணவர்களை அனுமதித்தல்

யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத்தின் சித்த மருத் துவப் பிரிவிற்கு பி. எஸ். எம். எஸ். பட்டமாணிப் படிப்பிற்கான மாணவர் களைச்சேர்ப்பதற்கு பின் வரும் தகைமைகள் உள்ள இலங்கைப் பிரஜைகளிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்:

(அ) 1988, 1989, 1990 ஆகஸ்ட் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட் சைப் பெறுபேறுகளின்படி இரசாயனவியல், பௌதீக வியல், தாவரவியல், விலங் கியல் ஆகிய நான்கு பாட ங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருக்கவேண் டும்.

(ஆ) 1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31 ஆம் திகதி யன்று 17வயதிற்கு குறை யாதவராக இருக்கவேண் டும்.

31-08-1992 இல் மேற் குறிப்பிட்ட கல்வித்தகை மைகள் யாவுமுடையவ ராக இருத்தல்வேண்டும். மேற் கூறப்பட்டவைக்கு அமையாத விண்ணப்பங் கள் நிராகரிக்கப்படும்.

அனுமதி பற்றிய விபரங் களும், விண்ணப்பப் பத்தி ரமும் உதவிப் பதிவாளர் (தேர்வுகளும், அனுமதிக ளும்) தேர்வுக்கிளை, அவர் களிடமிருந்து ரூபா 10 செலுத்தியோ, தபால் மூலம்எனின் 23x10 செ.மீ அளவுள்ள தபால் மேலுறை ஒன்றை முத்தி ரையிட்டு விலாசமிட்டு, ரூபா 10க்கான காசுக்கட் டளையை, நிதியாளர், யாழ் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப் பட்டு அத்துடன் அனுப்பு வதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய கடைசித்திகதி 31-08-1992

பதிவாளர்
(சி/4788)

---

யில் நீங்கள் எம்மால் கைது செய்யப்பட்டு இருக்கின்ற பொழுது உங்கள் குடும்பங்

கிழமை (இன்று) மாலை யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலய அரங்கில் நடைபெறும்.

## மேஜர்முரளி நினைவு நாள் விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)
மேஜர் முரளி நினைவுநாள் விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2-00 மணியளவில் யாழ். புனிதபரியோவான் கல்லூரி மைதானத்திலும் மட்டுவில் மகாவித்தியாலய மைதானத்திலும் நடைபெற உள்ளது.

விடுதலைப்புலிகள் மாண வர் அமைப்பு இவ்விழாவை ஒழுங்கு செய்துள்ளது. பரியோ வான் கல்லூரியில் நடை பெறும் விழாவில் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் யாழ். கல்விக்கோட்டப் பொறுப்பாளர் திரு. இதயன் தலைமை தாங்குகிறார். யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் திரு. வே. ஆறுமுகம் பிரதமவிருந்தினரா கவும், திரு அருணகிரிராஜா, திரு. மகேந்திரன், யாழ். மாவட்டத்தளபதி, திரு. செல்வ ராசா ஆகியோர் சிறப்பு விருந் தினராகவும் கலந்து கொள்ள உள்ளனர்.

## அகதிகள் இலங்கை திரும்ப விமான சேவை

(சென்னை)
தமிழகத்திலிருந்து இலங் கைத் தமிழ் அகதிகள் நாடு திரும்ப உதவும்வகையில் வரும் திங்கள் முதல் விமானப்போக்கு வரத்துச் சேவை நடத்தப் படவுள்ளது.

வாரம் இருமுறை, திங்கட் கிழமையும், வியாழக்கிழமை யும் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து திருக்கோணமலைக்கு இந்த விமானச்சேவை நடைபெறும்.

மேலும், 10,000 தமிழ் அக திகள் நாடு திரும்ப விருப்பம் தெரிவித்திருப்பதாக அதிக கள் மறுவாழ்வுத்துறைஆணை யாளர் பி. எம், ராமதாஸ் தெரிவித்தார்.

---

## தேவை

லேத் இயந்திர வேலையில் நல்ல அனுபவமுடைய வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மாதாந்தம் ரூபா ஐயாயிரம் சம்பளமாக வழங்கப்படு வதுடன் சாப்பாடு வசதியும் செய்து கொடுக்கப்படும். தெரிவு செய்யப்படுபவர் மடுப் பிரதேசத்தில் கடமை யாற்றக் கூடியவராக இருக்க வேண்டியது அவசியமான தாகும்.

தொடர்புக்கு :

**றொபேட் கராஜ்**

வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

[சி/4797]

---

## முக்கிய அறிவித்தல்

ஆனைக்கோட்டை மூர்த்த நயினார் ஆலய விநாயகர் தேர் எமது மூதாதையர் (பரம்பரையாக) தொடக்கம் எமது சந்ததியார்வரை பராமரித்து வருகிறோம் விநா யகர் தேர் திருத்தியமைப்பதற்காகவே நிதி திரட்டுகி றோம் என்பதை மக்களுக்கு அறியத் தருகிறோம்.

இப்படிக்கு
**விநாயகர் தேர் உபயகாரர்**

(2919)

---

தலைமைச்செயலகத்துக்குமுன் னால் மொறட்டுவ வாசிகள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

சர்வோதய நிலையம் சூழலை மாசுபடுத்துவதாகத் தெரிவிக்கப்படுகிறது. சர்வோ தயம் சூழலை மாசுபடுத்துவ தாகக் கண்டித்தே மொறட் டுவ வாசிகள் சிலர் சர்வோ தயம் முன்னால் ஆர்ப்பாட் டம் செய்தனர் சர்வோதய உஸவத்த வீதி வெண்கட்டித் மாசு படுத்துவதாகவும், சர் வோதய நிலைய வளாகத்தில் அமைந்திருக்கும் உயர்சக்தி வாய்ந்தஜெனரேட்டர்ஒலியை மாசு படுத்துவதாகவும் ஆர்ப் பாட்டக்காரர் தரப்பில் சொல்லப்படுகிறது.

''சர்வோதயம் போதிப்ப தைச் செய்வதில்லை'' என்ற சுலோக அட்டைகளை ஆர்ப் பாட்டக்காரர் தாங்கி நின்ற னர்.

## அடிமைப்படாத நிலையை அளிப்பது அவசியம்

**–பிரேமதாசா**

(கொழும்பு)
அரசியல் ரீதியிலோ, பொரு ளாதார ரீதியிலோ வெளிநாடு களுக்கு அடிமைப்படாத ஒரு நிலையை மக்களுக்கு அளித் திட வேண்டியது முக்கியமா னதாகும் என்று சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா கூறியுள்ளார்.

மாத்தளை மாவட்டத்தில் சில அபிவிருத்தித் திட்டங் களை திறந்து வைத்து உரை யாற்றுகையில் அவர் மேலும் காட்டு மிருகங்களால் விவசா யப் பயிர்கள் அழிக்கப்படுவது போக்குவரத்துப் பிரச்சினை, கல்வி, சுகாதாரத்துறைகளில் பிரச்சினைகள் போன்றன கிராமங்களில் எதிர் நோக்கப் படுவதாகவும் குறிப்பிட்டார்.

---

## சேவைக்கால பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ். மாநகராட்சி மன்ற சுகாதார வெளிக்கள உத்தி யோகத்தர்களுக்கான சேவைக் காலப்பயிற்சி வகுப்புக்கள் யாழ் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நாளை தொடக்கம் எதிர் வரும் 1 ஆம் திகதி வரை நடைபெறும்.

''யுனிசெப்'' உதவியுடன் நடைபெறும் இப்பயிற்சிவகுப் புக்கள் நான்கு நாட்கள் தொடர்ந்து நடைபெறும்.

---

### சாம்பல்தீவு

காவலரண்கள் அழிக்கப்பட் டன.

இத் தாக்குதல்களின் போது ஐந்திற்கும் மேற்பட்ட இராணு வத்தினர் கொல்லப்பட்டனர் ஏனையோர் தப்பி ஓடிவிட்ட னர்.

---

### வாகன

யப்பட்டுள்ளது.

தவிர யாழ். குடாநாட் டிற்கு பொருள்கள் கொண்டு செல்லப்படுவது மந்த நிலை அடைந்திருப்பதனால் மிகக் குறைந்த வாகனங்களே வட பகுதிக்கு பொருள்களை ஏற்றி வருவதை அவதானிக்க முடி கிறது. (தி)

---

### சிங்கள

முன்னேற முயன்ற இராணு வத்தினர் மீது புலிகளின் வேறொரு அணியினர் தாக்கு தலைத் தொடுத்தனர். இத் தாக்குதலின்போது புலிகளின் ஆர். பி. ஜி தாக்குதலுக்கு உள்ளாகி 'செயின்' கவச வாகனம் சேதமாகியது. இதைத் தொடர்ந்து இரண்டு 'பவள்' கவச வாகனங்கள் பின்வாங்கி முகாம் திரும்பின.

---

### பின்போடப்பட்டது

வடக்குக் கிழக்கு மாகாணங் கள் ஒன்றாக இயங்க வேண் டுமா அல்லது தனித்தனியாக இயங்க வேண்டுமா என்பதைத் தீர்மானிக்க அந்தப் பகுதியில் மேற்கொள்ளப்படவுள்ள வாக் கொடுப்பு 1993 ஆம் ஆண்டு மார்ச் 5 ஆம் திகதிக்கு பின் போடப்பட்டுள்ளதாக அறி விக்கப்பட்டுள்ளது

---

### எல்லை

பல ஆயுதங்களை கைப்பற்றிய சம்பவத்தால் விமலஞான தேரர் ஆவேசமடைந்திருந் தார் என்றும், இவர் இராணு வம் உசாரில்லாது இருக்கின் றது எனவும் இப்பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள படை முகாம்களில் அனுபவம் மிக்க படையினர் நிலை கொள்ள வைக்கப்பட வேண்டும்என்றும் அபிப்பிராயம் தெரிவித்திருந் ததாகவும் கூறப்படுகின்றது.

உணவு மற்றும்பாதுகாப்புக் களை வழங்கி வந்த இப்பிக்கு கொல்லப்பட்டதைத் தொடர் ந்து அச்சமடைந்த மக்கள் பாதுகாப்பு கருதி வேறு இடங் களுக்கு இடம் பெயர்ந்து வரு கின்றனர்.

இவர்களை அவ்விடங்களி லேயே தங்கியிருக்குமாறும் எக்காரணம் கொண்டும் வெளி யேற வேண்டாம் எனவும்பாது காப்பு ஏற்பாடுகள் பலப்படுத் தப்பட்டிருப்பதாகவும் இரா ணுவம் சுவரொட்டிகள் மற் றும் ஒலிபெருக்கி மூலமும் அறி வித்த போதிலும் இராணுவத் தின் இவ்வேண்டுகோளையும் நிராகரித்து மக்கள்அங்கிருந்து வெளியேறி வருகின்றனர்.

இதனால் இவ்வாறு வெளி யேறும் மக்களை எவ்வாறு தடுத்து நிறுத்துவது என்றே புரியவில்லையென அப்பகுதி அரசாங்க அதிகாரிகள் கூறி உள்ளனர்.

---

இவரது கோரிக்கைக்கு ராஜீவ்காந்தி கொலை பற்றி புலனாய்வு நடத்திய குழு ஆட்சேபனை தெரிவித்துள் ளது.

ஆதரை, ஜெர்மனியில்இருக் கும் தனது சகோதரரிடம் செல்வதற்கு இந்திய பாஸ் போட் எடுத்துத் தருவதாக சிவராசன் தந்தவாக்குறுதியின் பேரிலேயே தமிழ் நாட்டுக்குச் சிவராசனுடன் வந்ததாகத் தனது மனுவில் குறிப்பிட்டுள் ளார்.

காங்கிரஸ் கட்சியின் உயர் தலைவர்களுடன் தனக்குத் தொடர்பிருப்பதாகச் சிவரா சன் கூறியதாகவும், சிவராசன் டில்லியில் கல்யாண ராமனு டன் தொடர்பு கொண்டதா கவும் அந்த மனுவில் தெரிவிக் கப்பட்டுள்ளது. ராஜீவ்காந்தி மே 21 ஆம் திகதி சிறிபெரும் புதூருக்கு வரும் செய்தியை கல்யாணராமனே தெரியப் படுத்தியதாகவும் ஆதரை தனது மனுவில்மேலும் தெரி வித்துள்ளார்.

ஆதரையும் அவரது பாட் டன் கனகசபாபதியும் கல் யாணராமனைச் சந்திக்கச் சென்றபோது விசேட புல னாய்வுக் குழுவினால் கைது செய்யப்பட்டனர்.

கல்யாணராமன் இப்போது டில்லியில் காங்கிரஸ் காரியா லயத்தில் பணிபுரியவில்லை.

நீதியரசர் ஜனார்த்தனன் வழக்கை ஆகஸ்ட் 3-ஆம் திகதி வரை ஒத்திப் போட்டிருக்கி றார்.

## 3 வைத்திய நிபுணர் நியமனம்

கைதடி ஆயுள்வேதக் கல்லூ ரிக்கு மூன்று விசேட வைத்திய நிபுணர்கள் நியமிக்கப்பட்டிரு க்கின்றனர்.

விசகடி, எரிகாயம், முறிவு நெறிவு ஆகிய துறைகளில் விசேட தேர்ச்சி பெற்ற வைத் திய நிபுணர்களை நியமிப்பது தொடர்பாக கொழும்பு தலை மையகத்துடன் யாழ். அரசா ங்க அதிபர் நடத்திய பேச் சுக்களையடுத்து மேற்படி நட வடிக்கை எடுக்கப்பட்டிருக்கி றது. நியமிக்கப்பட்ட மூன்று வைத்திய நிபுணர்களும் மிக விரைவில் தமது கடமைக ளைப் பொறுப்பேற்க உள்ள னர். (கடபா)

## முத்தமிழ் விழா

புனித றோக் றோ. க. வித் தியாலய முத்தமிழ் விழா இன்று காலை 9 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது

சிறப்பு விருந்தினர்களாக கடற்புலிகளின்யாழ மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப் பாளார் மறவன் கொத்தணி அதிபர் ஆர். அருளானந்தம், கலாநிதி காரை சுந்தரம் பிள்ளை, சோ. பத்மநாதன் யாழ். பேரவைப்பங்குத்தந்தை வண. எஸ். எச். ஜெபநேசன் ஆகியோர் கலந்து கொள்வர் பிரதமவிருந்தினராக பிரதிக் கல்விப்பணிப்பாளர் சி. வேலா யுதம் கலந்து கொள்கிறார்.

---

## செய்தியாளர் கலந்துரையாடல்

எமது ஈழநாதம் பத்திரிகையின் செய்தியாளராக பணிபுரியும் அனைத்து பிரதேச செய்தியாளர்களும் இன்று (30-7-92) காலை 11.00 மணிக்கு எமது பணி மனையில் நடைபெறும் செய்தியாளர் கலந்துரையாட லில் தவறாது சமுகமளிக்கும் படி கேட்டுக் கொள்ளப் படுகின்றீர்கள்.

-பிரதம ஆசிரியர்.

---

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**29- 07- 1992**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்:-
27–0352, 26-3667, 26-7525, 42-1046, 41-5015, 26 1629, 28-1110, 27-5579, 42-2555, 41-8626, 36-5045, 36-5168, 25-4381, 25-6473, 25-3302, 25-542, 36-5266, 27-6799,

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.